(இ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் காலரா நோய் பரவுதல் குறித்து.

* திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் உயிரோடு சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு மிகப் பெரிய பிரச்சினையை இந்த அரசினுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். மழை இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள வறட்சியையொட்டி, காலரா நோய் மிகக் கடுமையாகப் பரவி குருங்குளம், பஞ்சாத்தி, வைரிவயல் போன்ற அறந்தாங்கி தொகுதியிலுள்ள சில கிராமங்களில் ஏறக்குறைய 35 பேர்களுக்கு மேலே பாதிக்கப்பட்டு, அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதில், ஐந்து பேர் இறந்து போனதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இது மேலும் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது புதுக்கோட்டை மாவட்டத்திலே மட்டும் அல்ல. வறட்சியாக இருக்கின்ற மற்ற மாவட்டங்களிலேயும் வெயில் கொடுமையாலும், தண்ணீர் இல்லாததாலும் இப்படி பரவ வசதியிருக்கிறது. நிறைய பரவும் நிலை இருக்கிறது. இதுகுறித்து அரசு அளவிலே விசாரித்து அரசு ஒரு அறிக்கையைத் தர வேண்டும். மருத்துவர் குழுவின் மூலமாக போதிய மருந்துகள் கொடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காலராவால் பாதிக்கப்பட்டிருக்கிற அறந்தாங்கி, இன்னும் மற்றப் பகுதிகளில் உள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அரசை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு அது தொடர்பாக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) பிரதமரின் சென்னை வருகையையொட்டி இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கோ. வீரையன் : தலைவரவர்களே, இந்த அவையிலே கடந்த 15-ந்தேதி அன்று நடைபெற்ற விவாதத்தின்போது, மறைமலை நகருக்கு நம்முடைய இந்திய நாட்டின் பிரதமர் வந்த போது இடிக்கப்பட்ட குடிசைகள் சம்பந்தமாக விசாரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அறிக்கை எதுவும் வைக்கப்படவில்லை. இன்னும் ஒருநாள் தான் அவை நிகழ்ச்சிகள் இருப்பதால் என்றைக்கு அறிக்கை வைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

1969 பிப்ரவரி 18] (திரு. உ. ரா. வரதராசன்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவரவர்களே, விவரம் சேகரிக்கப்படுகின்ற காரணத்தால் முழு விவரங்களும் கிடைத்த பின்னால்தான் அறிக்கை வைக்கப்படும்.

(உ) இந்தி மொழி பற்றிய பிரதமரின் பேச்சு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் தொலைக்காட்சி படச்சுருளைத் தருவித்தல்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது, தொலைக் காட்சியிலே பிரதமர் பேசிய பேச்சை, தொலைக்காட்சி ஃபிலிமை இங்கே தருவிப்பதாகச் சொல்லப்பட்டது. அது தருவிக்கப் படுமா? எப்போது தருவிக்கப்படும் என்பதை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தச் செய்தி தொலைக்காட்சிக்கு எழுதப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் இங்கே வைக்கப்படும். அதே நேரத்தில் தொடர்புடைய உறுப்பினர் அவர்களின் பதிலும் பெற்று வைக்கப்படும்.

(ஊ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இந்த அவையிலே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், குழுக்கள் பற்றித் தாங்கள் அறிவித்தீர்கள். அங்கீகரிக்கப்பட்ட குழுவிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றெல்லாம் சொன்னீர்கள். அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. இரண்டாவதாக, தமிழ்நாடு ஜனதா என்று சொன்னீர்கள். தமிழ்நாடு ஜனதா என்றால் அந்தக் கட்சி எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறது; அதற்கு யார் தலைவர் என்பது தெரியவில்லை. காரணம் ஜனதா கட்சி, ஜனதா தாளுடன் இணைந்துவிட்டது. அந்தக் கட்சியிலும் இரண்டு தலைவர்கள், அதாவது இரண்டு கட்சிகள் இருப்பதாக வெளியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றுக்கு இந்துபாய் பட்டேல் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். இன்னொன்றுக்கு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தேவ கௌடா தலைவர் என்று சொல்கிறார்கள்.